


# SRCAS PULSE

An IQAC Initiative

8th October, 2022






# Events @ SRCAS

## நம் கல்லூரியில் 31-வது பட்டமளிப்பு விழா




நம் கல்லூரியின் 31-வது பட்டமளிப்பு விழா, கல்லூரி கலையரங்கில் இன்று (08.09.2022) மாலை 4 மணிக்கு நடைபெற்றது. விழாவிற்கு எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் உயர்திரு டி.லட்சுமிநாராயணசுவாமி தலைமை வகித்தார். நம் கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல்.சிவக்குமார் வரவேற்றார்.

சென்னை கல்லூரி கல்வி இயக்குநர் முனைவர் எம்.ஈஸ்வரமூர்த்தி, விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பட்டங்கள் வழங்கி, பேசியதாவது: ஒரு மனிதனை மேம்படுத்த கல்வி மிகவும் முக்கியமானது. படித்த முடித்த பின்னர் உங்களுடைய வாழ்வின் லட்சியம் என்ன என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இன்று வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. அதை எட்டிப் பிடிக்கும் வகையிலான தகுதிகள் உங்களிடம் உள்ளனவா? என்பதைக் கண்டறிந்து அதை வளர்த்துக் கொள்ள வேண்டும். படிக்கும் வரை பெற்றோர் ஆதரவில் நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள். படித்து முடித்த பின்னரும் அவர்களது ஆதரவை எதிர்பார்த்துக் காத்திருப்பது சரியல்ல. உங்களை நீங்கள் தான் கவனித்துக் கொள்ள வேண்டும். கண்டுபிடியுங்கள் உங்களுக்கு என்ன திறமை ஒளிந்து கிடக்கிறது என்று?. அந்த திறமைக்கு ஏற்ற வாய்ப்பு என்ன? என்பதைத் தேடி நகர்ந்தால் வெற்றி உறுதி. அதிர்ஷ்டம் எல்லோருக்கும் கைக்கொடுக்காது.






ஆனால் கடின உழைப்பு தான் இன்றைய அனைத்து வெற்றியாளர்களுக்கும் கைக்கொடுத்திருக்கும். நேர்மறை எண்ணங்கள் தான் உங்களை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும். எதிர்மறை எண்ணங்கள் எப்போதும் உங்களை வீழ்ச்சியடையவே செய்யும். கிடைக்கும் வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்தி அனைவரும் வாழ்வில் வெற்றிபெற வாழ்த்துகள். இவ்வாறு முனைவர் எம்.ஈஸ்வரமூர்த்தி கூறினார்.

அதைத் தொடர்ந்து சென்னை ஹெச்.சி.எல். சர்வீசஸ் வர்த்தகப் பிரிவு தலைவர் திரு. சுவாமிநாதன் பாலசுப்பிரமணியன் வாழ்த்துரை வழங்கினார். அப்போது, “தொழில்நுட்பத்துறையில் ஆண்களை விட 55 சதவீதம் பெண்கள் திறமையாகப் பணிபுரிகின்றனர். அவர்களுக்குக் கொடுக்கும் பணியைச் சரியாகச் செய்து முடிக்கின்றனர். செய்யும் வேலையை விரும்பி செய்ய வேண்டும். கடமைக்காக செய்யச்கூடாது. இன்றைய தலைமுறையினர் மிகவும் அறிவாளிகள். கற்றுக் கொள்வதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. நமக்குக் கிடைத்த அம்பைக் கொண்டு முயலை வேட்டையாட முயற்சிப்பதற்குப் பதிலாக, யானையை வேட்டையாடக் கற்றுக் கொள்ள வேண்டும். அதில் தோல்வியடைந்தாலும் வெற்றியே. நம்முடைய திறமை என்னவென்று தெரியாமல், களத்தில் இறங்கி தோற்கக் கூடாது. பிரச்சினைகள் அனைவருக்கும் பொது. அதை சரிசெய்ய நேரம் ஒதுக்க வேண்டும். அதற்கு சற்று இடைவெளி எடுத்துக் கொள்ள வேண்டும். மனவலிமை மிகவும் முக்கியம். மனிதர்கள் வெவ்வேறு வகையினர். இதில் நாம் எது எதற்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று திட்டம் வகுத்து செயல்பட்டால் வாழ்க்கை அழகானதாகும். இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் வி.விஜயகுமார், டீன்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர் கலந்து கொண்டனர்.





# Student Zone

## வண்ணத்தூரிகை







**Sakthi Sri**
**I MSW**

## "I do"... Photography





**Hari Krishnan**
**I B.Com PA**



# Physics - World Space Week

**7th October 2022**

**The Department of Physics celebrated World Space Week 2022 on October 7, 2022. In this connection intra collegiate events have been conducted and prize winners were awarded Shield and certificates. Dr.Sathish Kumar Saravanan, Post Doctoral Scientist, International Institute of Physics Brazil, He released the Newsletter Gravity volume 6 and Interacted with the gathering on " Black Hole".**












# Events @ SRCAS
























# BCA - Seminar

**7th October 2022**

**Department of Computer Applications organised an seminar on supervised and unsupervised learning in machine learning concepts. The resource person was Dr.H.Vignesh Ramamoorthy, Assistant Professor, Department of IT & CS from Sri Krishna Arts and Science College, Coimbatore. The event was conducted for second and third year BCA students. The main objective of this seminar to give knowledge about supervised and unsupervised learning in machine learning. Seminar concentrated on various algorithms and subsets of artificial intelligence and more.**















# INFO Corner

## KASHMIR'S GOLDEN ERA IS BACK



TOURISM IS THE BIGGEST EMPLOYER IN JAMMU AND KASHMIR, SINCE JANUARY, 2022 TILL DATE, 1.62 CRORE TOURISTS HAVE VISITED JAMMU AND KASHMIR, THIS IS THE HIGHEST IN 75 YEARS OF INDEPENDENCE !

**IMPRESSIVE DEVELOPMENT IN THE VALLEY** 🇮🇳





## HAPPY INDIAN AIRFORCE DAY 🇮🇳



ON THIS DAY IN 1932, THE INDIAN AIRFORCE WAS FORMED. TODAY IS THE 90TH ANNIVERSARY OF INDIAN AIRFORCE !

**THE GUARDIAN OF THE SKY** 🇮🇳




## தி கோவை ஹெரால்டு

தமிழ் & ஆங்கிலம் வார இதழ் 08.10.2022

### ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியில்

# 31-வது பட்டமளிப்பு விழா




தி கோவை ஹெரால்டு

கோவை நவ இந்தியாவில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 31-வது பட்டமளிப்பு விழா, கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டி.லட்சுமிநாராயணசுவாமி தலைமை வகித்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல்.சிவக்குமார் வரவேற்றார். சென்னை கல்லூரி கல்வி இயக்குநர் முனைவர் எம்.ஈஸ்வரமூர்த்தி, விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பட்டங்கள் வழங்கினார். அதைத்தொடர்ந்து சென்னை ஹெச்.சி.எல். சர்வீசஸ் வர்த்தகப் பிரிவு தலைவர் சுவாமிநாதன் பாலசுப்பிரமணியன் வாழ்த்துரை வழங்கினார். விழாவில் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் வி.விஜயகுமார், டீன்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர் கலந்து கொண்டனர்.

www.thekovaiherald.com | www.facebook.com/Thekovaiherald | thekovaiherald

## தினத்தந்தி

DAILY THANTHI
8.10.2022 (சனிக்கிழமை)



தேசிய அளவிலான இறகு பந்து போட்டி:

### ராமகிருஷ்ணா கல்லூரி மாணவர்கள் சாதனை

கோவை, அக்.8-

தேசிய அளவிலான விளையாட்டு போட்டி குஜராத் மாநிலத்தில் கடந்த 29-ந் தேதி தொடங்கி நடைபெற்றது. இதில் நாட்டின் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த கல்லூரி மாணவ-மாணவிகள் பங்கேற்று விளையாடினர். இறகு பந்து போட்டியில் தமிழகம் சார்பில் கோவை ஸ்ரீராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு வெள்ளி, வெண்கல பதக்கம் வென்று சாதனை படைத்தனர்.

ஆண்கள் இரட்டையர் பிரிவில் பன்னாட்டு வணிகத்துறை 2-ம் ஆண்டு மாணவர்கள் ஹரிஹரன்- ருபன்குமார் ஆகியோர் வெள்ளிப்பதக்கம் வென்றனர். கலப்பு இரட்டையர் பிரிவில் ஹரிஹரன்-நர்த்தனா ஜோடி வெண்கலப்பதக்கம் வென்றது. தேசிய அளவிலான விளையாட்டு போட்டியில், இறகு பந்து பிரிவில் தமிழக அணி பதக்கம் வெல்வது இதுவே முதல் முறை ஆகும். பதக்கம் வென்ற மாணவர்களுக்கு, எஸ்.என்.ஆர்.சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டி.லட்சுமிநாராயணசுவாமி, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் பி.எல்.சிவக்குமார், உடற்கல்வி இயக்குனர் கே.வடிவேலு ஆகியோர் பாராட்டு தெரிவித்தனர்.

THE HINDU Saturday, October 8, 2022
COIMBATORE

## City

# NGO takes up task of improving menstrual hygiene of tribal women

Wilson Thomas
COIMBATORE

A three-year-old Non-Governmental Organisation (NGO) started by a bunch of college students has taken up the task of improving menstrual hygiene of tribal women from four villages of Anaikatti hills in Coimbatore district.

The NGO, Thozhargalin Karam Charitable Trust (TKCT), has been distributing sanitary napkins to women in Kondanoor, Kondanoor Pudur, Kandivazhi and Panapalli tribal villages since July this year.

TKCT members during an outreach programme conducted in these villages before Deepavali in 2019 realised that most of the tribal women were unable to buy sanitary napkins.

"Our volunteers interacted with the women and found out that they need support to improve menstrual hygiene. Women volunteers took classes for them on menstrual hygiene, its importance, benefits of using sanitary napkins and how to discard them. In July, we distributed sanitary napkins sufficient for three months to all tribal women," said TKCT's founder of J. Bharanii Dharan. According to him, the TKCT finds money for the initiative through crowd funding and organic sanitary napkins are procured from Coimbatore-based start-up Bliss Natural at NGO rate.

As the napkins were made of organic materials, it was easy for the women to discard them, he said. The second batch of napkins were distributed on September 25 and the next batch would be distributed in December, said TKCT's managing trustee M.G. Yokendra Niruruthish.

Social worker G.P.N. Joshua said the NGO's intervention improved the lives of tribal women. "We hardly earn enough money to buy sanitary napkins as we struggle to meet other needs with the meagre income," said a tribal woman. TKCT that was started by 16 volunteers of the National Service Scheme attached to Sri Ramakrishna College of Arts and Science in 2019 is actively doing social work and outreach programmes.

SRCAS PULSE
AN IQAC INITIATIVE

# SRI RAMAKRISHNA
## COLLEGE OF ARTS & SCIENCE (Autonomous)
(FORMERLY SNR SONS COLLEGE)

Avinashi Road, Nava India, Coimbatore - 641 006.

Ranked 90th by NIRF 2022 | Accredited with 'A+' Grade by NAAC

AICTE & UGC Approved, ISO 9001:2015 Certified, Affiliated to Bharathiar University




## CONVENOR

**Dr.D.Sampath Kumar**

Associate Professor - Information Technology

## COORDINATORS

**Media**

**Dr.T.Sathiyaseelan**

Assistant Professor - Tamil

**Technical**

**Dr.P.Manikandaprabhu**

Assistant Professor - Computer Science